<u>காங்கயம் நகராட்சி</u>
<u>மன்றக்கூட்டத்தாள்</u>

**நிகழும் ஸ்ரீ ஹேவிளம்பி வருடம் தமிழ் மாதம் ஆவணி 7–ஆம் நாள் ஆங்கில வருடம் 2018 ஆகஸ்ட் 23-ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற அவசரக்கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**<u>மன்றப்பொருள்:1</u>**

**ந.க.எண் :1221/2018/அ1**

காங்கயம் நகராட்சியில் 01.04.2018 முதல் சொத்துவரியில் பொது சீராய்வு செய்வது குறித்து வரப்பெற்றுள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (M.A.IV) துறையின் அரசாணை (நிலை) எண்.73 நாள்.19.07.2018 மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (M.A.IV) துறையின் அரசாணை (நிலை) எண்.76 நாள்.26.07.2018 ஆகிய அரசாணைகளில் கீழ்கண்டவாறு சொத்துவரி சீராய்வு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

| வ. எண். | விபரம் | சொத்துவரி சீராய்வு சதவீதம் |
|---|---|---|
| 1. | குடியிருப்பு கட்டிடங்கள் | 50 சதவீதத்திற்கு மிகாமல் |
| 2. | குடியிருப்பு வாடகை கட்டிடங்கள் | 50 சதவீதத்திற்கு மிகாமல் |
| 3. | குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் ( வணிகம் மற்றும் தொழிற்சாலை) | 100 சதவீதத்திற்கு மிகாமல் |

மேற்கண்ட அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 967 . நாள்.23.08.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**(ஒ.ம்) ஒ.ராஜாராம்**
**ஆணையாளர்**
**மற்றும் தனிஅலுவலர்**
**காங்கயம் நகராட்சி**

**/ உண்மை நகல் /**

**மேலாளர்**
**காங்கயம் நகராட்சி**

## <u>ககாங்கயம் நகராட்சி</u>
## <u>மன்றக்கூட்டத்தாள்</u>

**நிகழும் ஸ்ரீ ஹேவிளம்பி வருடம் தமிழ் மாதம் ஆவணி 15–ஆம் நாள் ஆங்கில வருடம் 2018 ஆகஸ்ட் 31-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரணகூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**<u>மன்றப்பொருள்:1</u>**

**ந.க.எண் : 1221/2018/அ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள சொத்துவரி இனங்களுக்கு 01.04.2018 முதல் பொது சீராய்வு செய்யப்படுவதை பொது மக்களுக்கு அறிவிக்கும் பொருட்டு நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும், சுயமதிப்பீட்டு படிவம் தயார் செய்யவும், சொத்துவரி பொது சீராய்வு செய்யப்பட்டதை அரசிதழில் விளம்பரம செய்யவும், எழுது பொருட்கள் மற்றும் சில்லறை செலவினங்கள் ஆகிய செலவினங்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) –இக்கு பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 968 . நாள்.31.08.2018.**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:2</u>**

**ந.க.எண். 439/2018/சி1**

காங்கயம் நகராட்சியில் பணிபுரிந்து வரும் திரு.பா.நல்லசாமி அலுவலக உதவியாளர், தனது குடும்ப சூழ்நிலை காரணமாக கரூர் நகராட்சில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு பணிமாறுதல் கோரி விண்ணப்பித்துள்ளார். எனவே, திரு.பா.நல்லசாமி, அலுவலக உதவியாளரை கரூர் நகராட்சிக்கு பணிமாறுதல் செய்ய பரிந்துரை செய்தும், மேற்படி விண்ணபத்தினை உரிய நடவடிக்கைக்காக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு மேலனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டபப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.969 . நாள்.31.08.2018.**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:3</u>**

**கோப்புஎண்.826 /2017/எப்1**

அனுமதியற்ற மனைகள்/ மனைப்பிரிவுகள் வரன்முறைப்படுத்துதல் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட மனைப்பிரிவுகளுக்கு நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர், சேலம் அவர்களால் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டது. அரசாணை எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்திதுறை [UD4 (3) ], நாள்.04.05.2017 மற்றும் அரசாணை எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை [UD4 (3) ], நாள்.13.10.2017–இன்படி கீழ்கண்ட மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட பூங்காக்கள் தன்னிச்சையாக நகராட்சியின் வசம் எடுத்துக்கொள்ளப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | இடம் | வார்டு எண் | க.ச.எ ண்./ ரீ.சர்வே | மொத்த விஸ்தீரணம் | நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் அவர்களின் ஒப்புதல் விவரம் |
|---|---|---|---|---|---|
| 1 | பழைய கோட்டை ரோடு | 3 | 223 Part | 1706.00 ச.அடி<br>3402.00 ச.அடி<br>-------<br>5108.00 ச.அடி | கடிதம் ந.களண்.5947/2017–சேம–3, நாள்.21.11.2017 |
| 2 | பொதிகை கார்டன், பழைய கோட்டை ரோடு | 3 | 261/1A part | 8794.00 ச.அடி | கடிதம் ந.க.எண்.147/2018–சேம3, நாள்.26.02.2018 |
| 3 | தாராபுரம் ரோடு | 11 | 734/9 | 1758.00 ச.அடி | கடிதம் ந.க.எண்.43/2018சேம–3, நாள்.15.03.2018 |
| 4 | சென்னிமலை ரோடு | 4 | 331/4 | 1425.00 ச.அடி | கடிதம் ந.க.எண்.1251/2018சேம–3 , |
| 5 | ஸ்ரீ காவேரி நகர், தாராபுரம் ரோடு | 9 | 841/2B | 6240.00 ச.அடி<br>1012.00 ச.அடி<br>687.50 ச.அடி<br>-------<br>7939.50 ச.அடி | கடிதம் ந.க.எண்.772/2018–சேம–3, நாள்.31.05.2018. |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் ஏற்கலாம்
2. அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள கருத்துரு அனுப்பலாம்

**நகர்மன்ற தீர்மான எண். 970, நாள்.31.08.2018.**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:4</u>**

**கோப்பு எண் : 1547/2017 /இ1**

காங்கயம் நகராட்சியில் செயல்பட்டு வரும் காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் மற்றும் அமராவதி குடிநீர் திட்டங்களில் குடிநீர் சுத்திகரிப்பு பணிக்கு Hypo chloride திரவம் கலக்கப்பட்டு குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது. ஒப்பந்த அடிப்படையில் மேற்படி திரவத்தை வினியோகம் செய்யும் பணியை மேற்கொள்ளலாம். இந்த ஹைப்போ குளோரைடு வினியோகம் செய்யும் பணிக்கு ரூ.5.00 ( ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 971 . நாள்.31.08.2018.**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:5</u>**

**கோப்பு எண் : 1296/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட லட்சுமி நகரில் தண்ணீர் தொட்டி மேடை உடைந்து பழுதடைந்துள்ளது. எனவே, புதிதாக தண்ணீர் தொட்டி மேடை அமைத்து தண்ணீர் தொட்டிவைத்து தண்ணீர் வினியோகம் செய்ய வேண்டியுள்ளது.

எம்.ஜீ.ஆர் காடு பகுதியில் புதிய குடிநீர் இணைப்புகள் வேண்டி விண்ணப்பித்துள்ளனர். இப்பகுதியில் பகிர்மான குழாய் இல்லாததால் குழாய் விஸ்தரிப்பு செய்ய வேண்டியுள்ளது.

திரு.வி.க நகர் திருப்பூர் ரோடு நாச்சிமுத்து திருமண மண்டபம் பின்புறம் கோவை ரோடு AC நகர் பகுதிகளில் குடிநீர் இணைப்புகள் கோரி விண்ணப்பங்கள் கொடுத்துள்ளனர். இப்பகுதிகளில் பகிர்மான குழாய்கள் இல்லாததால் குழாய் விஸ்தரிப்பு மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்படி பணிகள் பொதுமக்கள் நலன் கருதி பணியின் அவசர அவசியம் கருதியும் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 2.40 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.972 . நாள்.31.08.2018.**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:6</u>**

**கோப்பு எண் : 1269/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான சென்னிமலை ரோடு பகுதியிலுள்ள மயானத்தில் பாதுகாப்பிற்காக சுற்றிலும் கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளது. இந்த கம்பிவேலி பல இடங்களில் பழுதடைந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. இந்த பகுதிகளில் புதிதாக கம்பிவேலி அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 2.50 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.973 . நாள்.31.08.2018.**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:7</u>**

**கோப்பு எண் : 1217/2018/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2018–19 ன் கீழ் ரூ.7.10 இலட்சம் மதிப்பீட்டில் அகஸ்திலிங்கம் பாளையம் ரோடு விநாயகர் கோவில் பகுதி, சக்திநகர், கார்த்திகை நகர், பகுதியில் வடிகால் அமைத்தல், அய்யாவு செட்டியார் வீதியில் வடிகால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் பழையகோட்டை ரோடு பகுதியில் குழாய் பாதை அமைக்கும் பணிக்காக 21.08.18–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. திருமணி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட | + 4.50 % | அதிகம் |
| 2. சுப்பையா | மதிப்பீட்டை விட | + 6.95 % | அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். திருமணி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.974 . நாள்.31.08.2018.**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:8**

**கோப்பு எண் : 1231/2018/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி 2018–19 ன் கீழ் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் சென்னிமலை ரோடு எரிவாயு தகனமேடை முன்புறம் சி.ஐ குழாய்கள் அமைத்தல், சவுண்டம்மன் கோவில் அருகில் புதியதாக பிவிசி வாட்டர் டேங்க் பொருத்துதல், அண்ணா நகர் மற்றும் லட்சுமி நகர் பகுதியில் உள்ள Borewell flushing செய்யும் பணிக்காக 21.08.18–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட + 2.45 % அதிகம்
2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட + 4.70 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர்.வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.975. நாள்.31.08.2018.**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:9**

**கோப்பு எண் : 1031/2018/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2018–2019–ன் கீழ் ரூ.1.75 இலட்சம் மதிப்பீட்டில் தண்ணீர் பந்தல் நீருந்து நிலையத்தில் பாதுகாப்பு கம்பிவேலி அமைக்கும் பணிக்காக 21.08.2018–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. எஸ்.சுப்பையா மதிப்பீட்டை விட –0.10 % குறைவு
2. ஆர்.வடிவேல் மதிப்பீட்டை விட +0.50 % அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட –0.10% சதவீதம் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு.எஸ்.சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 976 . நாள்.31.08.2018.**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:10</u>**

**கோப்புஎண்.913/2018/எச்1**

காங்கயம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தி வரும் வண்டி எண். TN 42 Y 3774 மோட்டார் வாகனஆய்வு (FC) முடிவடைகிறது. மேலும் 2018–2019–ம் ஆண்டுக்கு மோட்டார் வாகன ஆய்வு வேலைகளுக்கு வண்டியில் உள்ள பழுதுகள் நீக்கி பெயிண்டிங் செய்து புதுப்பித்திட, ஏற்கனவே நகர் மன்ற தீர்மானம் எண்.885, நாள். 11.04.2018ன் படி மன்றம் அனுமதி வழங்கப்பட்டதின் படி கீழ்கண்ட நிறுவனங்களிலிருந்து ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

மதீப்பீட்டு தொகை. 1.50 இலட்சம்.

1. மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர் – மதிப்பீட்டைவிட 0.13 % குறைவு
2. காந்தி மோட்டார்ஸ், ஈரோடு. – மதிப்பீட்டைவிட 0.87 % குறைவு

மேற்காணும் இரு நிறுவனங்களிலிருந்து, வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள வ.எண்.2, காந்தி மோட்டார்ஸ் ,ஈரோடு எனும் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் தொகை வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 977 . நாள்.31.08.2018.**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:11</u>**

**கோப்புஎண்.1622 /2017/எச்1**

மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பூர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடைவடிக்கையாக காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள்.1,2,3,4,5 மற்றும் 6 ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேரும் சாக்கடை கழிவு நீரானது பழையகோட்டைரோடு, பாரத் நகர் பெரிய கால்வாய் வழியாக கரூர்ரோடு வரை சென்று அகிலாண்டபுரம் பகுதியிலுள்ள கழிவுநீர் குட்டையில் கலக்கிறது. இப்பகுதியில் உள்ள கழிவுநீர் கால்வாயில் அதிகமான புற்கள் மற்றும் முற்செடிகள் வளர்ந்து கழிவு நீர் செல்ல இடையூராக இருப்பதால் இதனை தனியார் கிட்டாச்சி இயந்திரத்தினை பயன்படுத்தி கழிவு நீர் கால்வாயினை தூர் எடுத்து சுத்தம் செய்ய விலைப்புள்ளி கோரிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

உத்தேச மதிப்பீட்டுதொகை ரூ2.00 இலட்சம்

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.978 நாள்.31.08.2018.**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**(ஒ.ம்) ஒ.ராஜாராம்**
**ஆணையாளர்**
**மற்றும் தனிஅலுவலர்**
**காங்கயம் நகராட்சி**

**/ உண்மை நகல் /**

**மேலாளர்**
**காங்கயம் நகராட்சி**